# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,* சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந்* தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, *அரசாங்க* வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *30.00*** **தபாற் செலவு : ரூபா *20.00***

**2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ. 16/2011

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இயைபான பிரிவுகளில் வெவ்வேறு நடைமுறைத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2011, சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (iv) (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ஆ) (i) 2005, ஓகத்து 2 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், 2005, செத்தெம்பர் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு, இருபது சதவீதப்படி (ஆடம்பர வீதம்) (இதில் வரிப்பின்னம் 1/6 ஆகும்) ;

(ii) பண்டங்கள் தொடர்பில், 2005, ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்

றதும், 2010, நவெம்பர் 23 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, இருபது சதவீதப்படி (ஆடம்பர வீதம்) (இதில் வரிப்பின்னம் 1/6 ஆகும்) ;

(iii) சேவைகள் தொடர்பில், 2005, ஒற்றோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்றதும், 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, இருபது சதவீதப்படி (ஆடம்பர வீதம்) (இதில் வரிப் பின்னம் 1/6 ஆகும்) ;

சைவர் வீதப்படி வரி இறுக்கப்படற்பாலனவான அத்தகைய பண்டங்கள் தவிர, நான்காம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறு வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதியின்மீது ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியில் -

(i) அதன் (ii) ஆம் விடயத்தில், "2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும், 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) அதன் (ii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(iii) *2010 நவெம்பர் 23 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், 2010 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும், 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும், சைபர் வீதப்படி வரி இறுக்கப்படற்பாலனவான பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர, வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் மீது பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்).*".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (இ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில் "அத்தகைய தைத்த ஆடைகளின்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"பின்வருவன தொடர்பான கணக்கிணக்கம் சமர்ப்பிக்கப்படுவதன்மேல், அத்தகைய தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரின் அல்லது சேவை வழங்குநரின் செயற்பாடுகள், உண்ணாட்டரசிறை

ஆணையாளர் தலைமையதிபதியினால் இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் விதிக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்படும் அத்தகைய காலம்வரை :-

(அ) அத்தகைய செய்துமுடிக்கப்பட்ட பண்டங்கள், வழங்கல்களைப் பெறுபவரினால் உண்மையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன வெனக் கூறி, அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பு ; அல்லது

(ஆ) அத்தகைய சேவைகள், ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள தைத்த ஆடைகளின் உற்பத்திக்காக உண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவெனக்கூறி, சேர்பெறுமதிச் சேவைகளின் வழங்கல் ;

ஆயின், 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து, இப்பந்தியின்கீழ் வரியைப் பின்போடுதலானது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.'';

(ஆ) அதன் (ஈ) என்னும் உட்பந்தியில், ''அத்தகைய உற்பத்தியாளர்களின் அல்லது சேவை வழங்குநர்களின்'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''பின்வருவன தொடர்பான கணக்கிணக்கம் சமர்ப்பிக்கப்படுவதன்மேல், அத்தகைய பண்டங்களின் உற்பத்தியாளரின் அல்லது சேவை வழங்குநரின் செயற்பாடுகள், உண்ணாட்டரசிறை

ஆணையாளர் தலைமையதிபதியினால் இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் விதிக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்படும் அத்தகைய காலம்வரை :-

(அ) அத்தகைய செய்துமுடிக்கப்பட்ட பண்டங்கள், வழங்கல்களைப் பெறுபவரினால் உண்மையில் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன வெனக் கூறி, அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பு ; அல்லது

(ஆ) அத்தகைய சேவைகள், ஏற்றுமதிசெய்யப் பட்டுள்ள தைத்த ஆடைகளின் உற்பத்திக்காக உண்மையில் பயன்படுத்தப்பட்டுள் ளனவெனக்கூறி, சேர்பெறுமதிச் சேவைகளின் வழங்கல் ;

ஆயின், 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து, இப்பந்தியின்கீழ் வரியைப் பின்போடுதலானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.";

(இ) அதன் (ஈ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(உ) உட்பந்திகள் (இ) அல்லது (ஈ)இல் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர்ந்த பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதன் மீது, ஆணையாளர் தலைமையதிபதி, பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள விண்ணப்பகாரருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்தபின்னரும், அத்தகைய விண்ணப்பகாரரினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் தொழிலின் தன்மையைக் கருத்திற்கொண்டும்,

ஆணையாளர் தலைமையதிபதியினால் இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பின்வருவோருக்குச் செய்யப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் வரிக்கொடுப்பனவைப் பின்போடலாம் :-

(i) முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிப்பிட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆள் ;

(ii) ஏற்றுமதியாளர் அல்லது இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட பண்டங்களை ஏற்றுமதியாளரொருவருக்கு வழங்குகின்ற உற்பத்தியாளர் ;

(iii) ஏற்றுமதிக்காக உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் தரம், பண்பு அல்லது பெறுமதி என்பவற்றின் சீராக்கத்தை விளைவிக்கின்ற சேர்பெறுமதிச் சேவைகளை ஏற்றுமதியாளரொருவருக்கு வழங்கும் எவரேனும் வழங்குநர் ;

(iv) அத்தகைய வழங்கல்கள் கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட வழங்குதல்களாகவிருக்கும் அளவுக்குக் கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின்போது, சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள்.

பண்டங்களின் அத்தகைய வழங்குநர்களின் அல்லது சேவை வழங்குநர்களின் செயற்பாடுகள், ஆணையாளர் தலைமையதிபதியினால் இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் விதிக்கப்பட்டவாறு நிறைவேற்றப்படும் அத்தகைய காலம் வரையும், அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகள் உண்மையில் இவ்வுட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு அளிக்கப்பட்டுள்ளனவென்றும், அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகள் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவென்றும் கூறி, அது தொடர்பான கணக்கிணக்கத்தைச் சமர்ப்பிப்பதன்மேலும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

“(2அ) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பதிவை இல்லாதாக்குமிடத்து, பரந்தளவில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள மூன்று நாளாந்தச் செய்தித்தாள்களில் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்களும் பதிவிலக்கங்களும் பற்றிய நிரலொன்றை அவர் வெளியிடச்செய்தல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (இ) என்னும் பந்திகளின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “(2) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளின் கீழ்’’ என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் -

(அ) அதன் (ஆ) என்னும் உட்பந்தியில் "மேன்மிகையானது 2006, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதாயின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மேன்மிகையானது 2006, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும், 2011, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதாயின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) உட்பந்தி (ஆ)வை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(இ) மேன்மிகையானது, 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதாயின், அத்தகைய மேன்மிகை, வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவடைந்த பின்னர் அல்லது இயைபான வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டு பெறப்பட்ட தேதியிலிருந்து, இவற்றுள் எது பின்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல் மீளளிக்கப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், அதன் (iv) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தில், "பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவுமீது உள்ளீட்டு வரி அனுமதிக்கப்படலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவுமீது உள்ளீட்டு வரி அனுமதிக்கப்படலாம் :

ஆயின், மேலும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் விடயத்திற் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்பில் குறிப்பீடுசெய்யப் பட்ட ஒரு நன்மை தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட ஆள் என்ற முறையில் தொழில்தருநர் உணவு மற்றும் போக்குவரத்து என்பவற்றின் வழங்கலை வெளி யிலிருந்து வருவிக்கப்பெறுவதன்மீது அவரினாற் பொறுக்கப்பட்ட கொடுப்பனவுகளின்மேல் செலுத்தப் பட்ட வரி, பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் உள்ளீட்டு வரவாக அனுமதிக்கப்படலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு," என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் "இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்:" என்பது வரையிலான சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு அனுமதிக்கப்படற்பாலதான ஏதேனும் உள்ளீட்டுவரிக் கான தொகை பின்வரும் மட்டுப்பாடுகளுக்கு அமைந்த தாதல் வேண்டும் :-

(அ) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதனிடுகை யின்றி மீள்விற்பனைக்காகப் பண்டங்களை இறக்குமதிசெய்யும் பதிவுசெய்யப்பட்ட ஆளொரு வரின் விடயத்தில், 2006, திசெம்பர் 31 ஆம்

தேதியன்றுள்ளவாறான மேன்மிகையான உள்ளீட்டுவரியுட்பட, 2007, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2010, திசெம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வெளிப்படுத்தப்பட்ட வெளியீட்டு வரியின் குறைந்த தொகையான எண்பத்தைந்து சதவீதம் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரி மீதி ஏதேனுமிருப்பின், அது, எவ்வாறாயினும் 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு முடிவடையும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிவரை அதே மட்டுப்பாட்டுக்கமைய, அடுத்துப் பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் அல்லது வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளில் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரியின் பாகமாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். 2011, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு உட்சேர்க்கப்படாத மீதி ஏதேனுமிருப்பின், அது, முன்கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு மாதத்துக்கும் உட்சேர்க்கப்படாத தொகையின் பத்துசதவீதத்துக்குச் சமமானவொரு பணத்தொகையை விஞ்சாது ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்குப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் உரிமைகோரவும்படலாம் ; ஆயின் அத்தகைய பணத்தொகை அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரவை வெளியீட்டு வரியிலிருந்து கழித்தபின்னர் அத்தகைய ஆளினாற் செலுத்தப்படற்பாலதான தேறிய வரியின் ஐந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது ;

(ஆ) 2010, திசெம்பர் 31 ஆம் தேதிவரை உரிமைகோரப்பட்டதும், மேலே உட்பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்டதுமான உள்ளீட்டுவரி நீங்கலாக, 2011, சனவரி 1 ஆம் தேதியன்று

அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக வெளிப்படுத்தப்பட்ட வெளியீட்டு வரியின் நூறு சதவீதமான குறைவான தொகை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனு மதிக்கத்தக்க உள்ளீட்டுவரி மீதி ஏதேனுமிருப் பின், அது, எவ்வாறாயினும் அதே மட்டுப்பாட்டுக் கமைய, அடுத்துப் பின்வரும் வரிவிதிக்கப்படற் பாலனவான காலப்பகுதியில் அல்லது வரிவிதிக் கப்படற்பாலனவான காலப்பகுதிகளில் அனுமதிக்கதக்க உள்ளீட்டு வரியின் பாகமாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன் றுள்ளவாறு உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவொன்றைப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் உடையவராகவிருந்து, ஆனால் 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் அத்த கைய ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வரிக்குட்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்கள் எவற்றையும் உடையவராகவிராத அத்தகைய ஆளொருவரின் விடயத்தில், அப்போது பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவு, விடயத்துக் கேற்ப, ஒன்றில் பந்தி (i), பந்தி (ii) அல்லது பந்தி (iii) என்பவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறை யில், உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவுத் தொகையை நிச்சயித்த பின்னர் எதிரீடு செய்யப் படலாம் :

(i) பதிவுசெய்யப்பட்ட ஆள், 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்

தொடர்புச் சேவைகளின் தொழிற்படுத்துநரொருவராகவுள்ளவிடத்து, எதிரீடானது, 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதும், தொலைத் தொடர்பு அறவீடாக அவரினாற் செலுத்தப் படற்பாலதுமான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ii) வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகவுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது 2011, சனவரி 1 ஆம் தேதிக்குப் பின்னர் வருமானவரியாக அத்தகைய ஆளினாற் செலுத்தப்படற் பாலதான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படுதல் வேண்டும் ;

(iii) மேலேயுள்ள, ஒன்றில் பந்தி (i)இன் அல்லது பந்தி (ii)இன் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவிராத ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்டு, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வரியாக அத்தகைய ஆளினால், 2011, சனவரி, 1 ஆம் தேதிக்குப் பின்னர் செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படுதல் வேண்டும்.

இக்காப்பு வாசகத்தின் நியதிகளின்படி ஒவ்வொரு மாதத்துக்குமான எதிரீடு, 2011 திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவின் பத்துச் சதவீதத்தை அல்லது அக்குறிப்பிட்ட

மாதத்துக்காக மேலே (i) ஆம், (ii) ஆம் அல்லது (iii) ஆம் விடயங்களிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், சுமத்தப்பட்டதுமான இயைபான வரியின் ஐந்து சதவீதத்தை, இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதனை விஞ்சுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி.

25ஆ. (1) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினதும் அல்லது வேறு ஆளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி :-

(அ) 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக ஒரு மாதமாக விருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக ஆறு மாதங்களாகவிருத்தல் வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அல்லது வேறு ஆளும், ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதி தொடர்பிலும், அவ்வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியை அடுத்துவரும் மாதம் முடிவடையு முன்னர், குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விபரத் திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) (அ) பிரிவு 26இன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குறித்துரைக்கப் பட்ட பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனத் தாலும் அல்லது வேறு ஆளினாலும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, செலுத்தப் படற்பாலதான வரி இறுதிச் சீராக்கம் எதுவுமிருப் பின் அது செய்யப்படுவதற்கமைய இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு விவரத்திரட்டு சமர்ப் பிக்கப்படுவதுடன் மாதாந்த அடிப்படையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதில் தரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணைதவறு கையிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இவ்வுட்பிரிவு எந்த குறித்துரைக்கப் பட்ட பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு அல்லது ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த குறித்துரைக் கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது ஆள் இச்சட்டத்தின் கருத்தெல்லைக் குள் ஒரு தவணைதவறுநராகக் கருதப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஐயங்களைத் தவிர்ப் பதற்காக, இவ்வத்தியாயத்தின் கீழ்" என்னும் சொற் களிலிருந்து "இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது." என்பதுவரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தின் பெறுமதிசேர்ப்பு பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் :-

(i) 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, இவ்வத்தியாயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரியின் கழிப்பனவுக்கு முன்னரான தேறிய இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையிலும் ; அத்துடன்

(ii) 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, இவ்வத்தியாயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரியின் கழிப்பனவுக்குப் பின்னரான தேறிய இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையிலும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(3) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்குச் செலுத்தப்படற்பாலதான வரித்தொகை :-

(அ) 2003, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2004, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கினால், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிசேர்ப்பின் பத்து சதவீதமாதல் வேண்டும் ;

(ஆ) 2004, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2005, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர்

தொடங்கினால், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிசேர்ப்பின் பதினைந்து சதவீதமாதல் வேண்டும் ;

(இ) 2005, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கினால், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிசேர்ப்பின் இருபது சதவீதமாதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கினால், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிசேர்ப்பின் பன்னிரெண்டு சதவீதமாதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(8) இப்பிரிவின்கீழ் வரியைக் கணக்கிடும் நோக்கத்துக்காக, குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அல்லது வேறு எவரேனும் ஆளும், அத்தகைய வரியின் கணக்கிடுதலை ஒருசீராகப் பிரயோகிப்பதனைக் கவனத்திற்கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(9) பிரிவு 25இ இன் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிசேர்ப்பின் எட்டுச் சதவீதம், 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுடன் இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளிற் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியில்

தாபிக்கப்பட்ட நிதியத்தில் முதலீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், முதலீடானது அடுத்துவரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் மாதாந்த அடிப்படையில் செய்யப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பின் ஐந்து சதவீதப்படி இறுக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின் -

(அ) 2007, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குவதும் 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைவதுமான காலாண்டு ஒவ்வொன்றுக்கும் ஐந்து சதவீதப்படியும் பதிவுத்தேதி எந்தக் காலாண்டில் வருகின்றதோ அந்தக் காலாண்டிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும் ஐந்து சதவீதப்படியும் ; அத்துடன்

(ஆ) 2011, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டு ஒவ்வொன்றுக்கும் பின்வரும் முறையிலும் :-

(i) பதிவுத் தேதி எந்தக் காலாண்டில் வருகின்றதோ அந்தக் காலாண்டின் தொடக்கத்திலிருந்து தொடங்குகின்ற மூன்றாண்டுகளினுள் வருகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும், ஆனால் 2010, திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பின்னரும் இரண்டு சதவீதப்படியும் ;

(ii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றாண்டுகள் முடிவடைந்த பின்னர் உடனடியாகத் தொடங்குகின்ற மூன்றாண்டு களினுள் வருகின்ற ஒவ்வொரு காலாண்டுக் கும் நான்கு சதவீதப்படியும் ;

(iii) விடயம் (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றாண்டுகள் முடிவடைந்த பின்னர் உடனடியாகத் தொடங்குகின்ற மூன்றாண்டு களினுள் வருகின்ற ஒவ்வொரு காலாண் டுக்கும் எட்டுச் சதவீதப்படியும் ; அத்துடன்

(iv) விடயம் (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றாண்டுகள் முடிவடைந்த பின்னர் உடனடியாகத் தொடங்குகின்ற மூன்றாண்டு களினுள் வருகின்ற ஒவ்வொரு காலாண்டுக் கும் பன்னிரெண்டு சதவீதப்படியும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஜ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஜ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது :-

"(ஆ) அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமையால் பதிவு பெறப்படும் காலாண்டு தொடங்கும் தேதியி லிருந்து பன்னிரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அத்தகைய பதிவு செல்லுபடியாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 25ஒ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**10**. பிரிவு 25ஜ என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது பிரிவு 25ஒ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"ஏதேனும் இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் களிலிருந்து வழங்கல்களின் பெறுமதி, வரி அறவிடப்படற் பாலதாதல்.*

25ஒ. (1) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் தொழிலிலிருந்து வரும் மொத்த வழங்கல்களின் பெறுமதி இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி வரி அறவிடப் படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் குறிப்பிட்ட இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் எந்த அளவுக்கு வரிக்குப் பொறுப்புடையதாகும் என்பதனைத் தீர்மானிப் பதற்காக உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலாக அமையும் சூழ்நிலைகளை இனம்காணுதல் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலிலிருந்தெழும் வழங்கல்களின் பெறுமதியை ஆய்ந் தறிதல்,

ஆகிய நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் காலத்துக்குக்காலம் வழங்குதல் வேண்டும்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஒவ்வோர் அரசாங்க முகவர் நிலையமும் எந்த ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ளதோ அந்த ஒப்பந்தத்தைப் பின்பற்றி அல்லது ஓர் ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ள வேறெவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் கொடுப்பனவைச் செய்யும் அத்தகைய முகவர் நிலையம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'ஒவ்வோர் அரசாங்க முகவர் நிலையமும் எந்த ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ளதோ அந்த ஒப்பந்தத்தைப் பின்பற்றி அல்லது ஓர் ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ள வேறெவரேனுமாளின் சார்பில் 2011 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் கொடுப்பனவைச் செய்கின்ற அத்தகைய முகவர் நிலையம்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "வரிமதிப்பீடு தொடர்புபடுத்தும் வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 முதல் 36 வரையிலான பிரிவுகளைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின், “அத்தியாயம் VI - மேன் முறையீடுகள்” என்ற தலைப்பின் கீழ் காணப்படுகின்ற 34 முதல் 36 வரையிலான பிரிவுகள் (இரண்டுமுட்பட), முறையே, “2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும், ”மீளாய்வுச்சபை” என்னும் சொற்களுக்கும் பதிலாக, அவை அவ்வத்தியாயத்தில் காணப் படும் இடங்களிலெல்லாம், “இச்சட்டத்தின் நியதிகளின்படி மேன்முறையீடுகளைக் கேட்கும் நோக்கத்துக்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அமைக்கப்படக்கூடிய மீளாய்வுச் சபைக்கு அல்லது ஏதேனும் ஆணைக்குழுவுக்கு” என்னும் சொற் களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், “ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைக் கருத்திற்கொள்ள, பரிசோதிக்க அல்லது தீர்மானிக்க” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைக் கருத்திற்கொள்ள, பரிசோதிக்க அல்லது தீர்மானிக்க அலலது எந்த வரிமதிப்பீடு தொடர்பில் தவணை தவறுகையிலுள்ள வரி அறவிடப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டிற்கெதிராக மேன்முறையீடொன்று முடிவுறா திருக்கின்றது என்ற நிகழ்வின் காரணத்தினால் மாத்திரம் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளை முப்பது நாட்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்கு ஒத்திவைக்க அல்லது பிற்போட” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்க மிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) வதிவற்ற ஆளொருவரின் வரிவிதிக்கற்பாலன வான வழங்கல்கள் எல்லாம், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையிலிருந்து பெறப்பட்ட அத்தகைய வழங்கல்களின் பற்றுச்சீட்டை அவரது முகவர் வைத் திருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி, ஒன்றில் நேரடி யாகவோ அல்லது அத்தகைய முகவரின் பெயரிலோ வரிமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், நேரடியாகவோ அல்லது முகவரின் பெயரிலோ அவ்வாறு வரிமதிப்பிடப்பட்ட இச்சட்டத்தின் நியதி களின்படி யான வரியானது, வதிவற்ற ஆளின் சொத்துக் களிலிருந்து அல்லது முகவரிடமிருந்து இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடப்படற்பால தாதலும் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்கள் இருக்குமிடத்து, வதிவற்ற ஆளின் வரிவிதிக்கற்பாலன வான வழங்கல்கள் தொடர்பில் அவர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வரிமதிப்பிடப்படலா மென்பதுடன், இச்சட்டத்தின் நியதிகளின்படி அதன் மீதான வரிக்குக் கூட்டாகவும் தனியாகவும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தில் ''பதிவுசெய்யப்பட்ட ஆளொரு வரினால் மேன்மிகையாகச் செலுத்தப்பட்ட அத்தகைய தொகை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்கு முன்னர் மேன்மிகையாகச் செலுத்தப்பட்ட அத்தகைய தொகை'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

“(இ) (i) மீளளிப்புகளின் ஏதேனும் உரிமைக் கோரிக்கை தொடர்பிலான முழுமையான அத்துடன் மேலதிகத் தகவலை எவரேனும் வரிமதிப்பீட்டாளரால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கொடுத்துதவத் தவறுமிடத்து;

(ii) எவரேனும் வரிமதிப்பீட்டாளரால் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய தேதியன்றும் அத்துடன் அத்தகைய நேரத்திலும் நேரில் வருகைதர அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் முறையீட்டுரை வழங்கத்தவறுமிடத்து,

ஆணையாளர் தலைமையதிபதி செய்யப்பட்ட மீளளிப்பின் உரிமைக்கோரிக்கையை உதாசீனம் செய்யலாம் :

ஆயின், மேலும், பதிவுசெய்யப்பட்ட ஆள், மீளளிப்பின் உரிமைக்கோரிக்கை ஆணையாளர் தலைமையதிபதியால் உதாசீனம் செய்யப்பட்ட பின்னர் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள், இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது சுகயீனம் காரணமாக அல்லது தவிர்க்கமுடியாத வேறு ஏதுவினால் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவைப்படுத்தப்பட்ட தகவலைச் சமர்ப்பிப்பதிலிருந்து அல்லது நேர்காணலுக்கு முறையாக வருகை தருவதிலிருந்து அவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி தடுக்கப்பட்டார் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிப்பாராயின், ஆணையாளர் தலைமையதிபதி அவரால் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுக்கமைய மீளளிப்பின் உரிமைக்கோரிக்கை தொடர்பான விசாரணையை மீள ஆரம்பிக்கலாம்.” ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(4) ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் மீளளிக்கப்படற்பாலதான தொகையை அத்தகைய நோக்கத்திற்கெனப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு மாத்திரமே வரவு வைத்தல் வேண்டும்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவை நீக்கம் செய்தல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்கு அல்லது 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற:" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, 25ஆ என்னும் பிரிவின்கீழான அல்லது 25ஏ என்னும் பிரிவின்கீழான விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்கு அல்லது 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற:" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"முகவர்" என்பது, வதிவற்ற ஆளொருவர் தொடர்பாக அல்லது எந்தப் பங்குடமையில் எவரேனும் பங்காளர் வதிவற்றவோர் ஆளாகவுள்ளாரோ அந்தப் பங்குடைமை தொடர்பாகப் பின்வருவோரை உள்ளடக்கும் :-

(அ) அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் இலங்கையிலுள்ள முகவர், அற்றோணித்தத்துவக்காரர், தரகர், பெறுநர் அல்லது முகாமையாளர் ; அத்துடன்

(ஆ) இலங்கையில் எழுகின்ற அல்லது இலங்கையிலிருந்து பெறப்பட்ட எவையேனும் இலாபங்களை அல்லது வருமானத்தை இலங்கையிலுள்ள எந்த ஆள்மூலம் அத்தகைய ஆள் அல்லது பங்குடமை பெறுகின்றதோ இலங்கையிலுள்ள அந்த ஆள்;";

(2) "கல்விச் சேவைகள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "ஏதேனும் கல்வித் தாபனத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் (அ) என்னும் பந்தியின் விடயம் (i) ஐ நீக்கம் செய்து விடயங்கள் (ii), (iii), (iv), (v) அத்துடன் (vi) என்பவற்றை, முறையே விடயங்கள் (i), (ii), (iii), (iv) அத்துடன் (v) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(4) "வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"தொலைத் தொடர்புச் சேவை" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத் தொடர்புத் தொழிற்படுத்துநர்களினால் வேறு ஒத்த தொழிற்படுத்துநர்களுக்கும் இறுதி ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்கும் வழங்கப்பட்ட சேவை என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**20**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் விடயம் (xvii) என்பதனை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(xviii) 2010, நவெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பெற்றோல், நிலக்கரி அல்லது நிலக்கீல் ;

(xix) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு -

(அ) 2010, நவெம்பர் 29 ஆந் திகதியிலிருந்து ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட தானியம் கலந்த வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பிற்கான பொறித்தொகுதியும் சாதனமும் ;

(ஆ) 2011, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து தோல் அல்லது பாதணிக் கைத்தொழிலுக்கு அல்லது பைகள், மோட்டார் ஹோம்ஸ், டாக்சி அளவுமானிகள், விவசாய எந்திரத்தொகுதி மற்றும்

*பாகங்கள், இலத்திரனியல் சாதனங்கள் அல்லது நவநாகரிக ஆபரணங்களின் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பவற்றின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதியும் சாதனமும் ;*

(இ) *2010, யூன் 1 முதல் பாரமற்ற மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் ;*

(ஈ) *2010, ஓகத்து 16 முதல் பழ விதைகள் ;*

(உ) *2011, சனவரி 1 முதல் தொலைத் தொடர்புச் சாதனங்கள் ;*

(xx) *2011, சனவரி 1 முதல், ஏதேனும் எந்திரத் தொகுதி அல்லது உயர் தொழினுட்பச் சாதனங்கள் தொலைத்தொடர்புத் தொழிலில் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுவதற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் தொலைத் தொடர்புச் சேவைகளின் எவரேனும் தொழிற்படுத்துநரினால் இறக்குமதி செய்யப் படுகின்ற அல்லது கொள்வனவு செய்யப்படு கின்றன என இனங்காணப்பட்டுள்ள அத்தகைய எந்திரத்தொகுதி அல்லது சாதனங்கள் ;*

(xxi) *(2010, ஓகத்து 18 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட இறக்குமதி களுட்பட) இலங்கைப் போக்குவரத்துச் சபையினாலும் இலங்கைப் புகையிரதத் திணைக் களத்தினாலும் புறநீங்கலாகப் பயன்படுத்தப் படுவதற்கான உதிரிப்பாகங்களும் துணைப் பொருட்களும் ;";*

*(2)* அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் :-

(அ) விடயம் (i) இன் உட்பந்தி (அ) என்பதில், "(2006, சனவரி 1 முதல் பயனுறுவதாக) கல்வித் தாபனம் ஒன்றினால் கல்விச் சேவைகள் ; அல்லது" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :-

"(அ) (1) (2006, சனவரி 1 இலிருந்து 2010, திசெம்பர் 31 இல் முடியும் வரை பயனுறுவதாக) கல்வித் தாபனம் ஒன்றினால் வழங்கப்படும் கல்விச் சேவைகள் ; அத்துடன்

(2) (2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) எவரேனும் ஆளினால் அல்லது பங்குடமையால் வழங்கப்படும் கல்விச் சேவைகள் ; அல்லது " ;

(ஆ) விடயம் (ii) இன் (ஆ) என்னும் பந்தியில், அவ்விடயத்தின் அ என்னும் உட்பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) (i) அத்தகைய குத்தகை உடன்படிக்கை 2004, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னரும் 2010, திசெம்பர் 31 இல் முடிவடையும் வரையும் செய்து கொள்ளப்பட்டிருப்பின், இருபத்தெட்டு பயணிகள் ஆசனங்களுக்குக் குறையாத ஆசனக் கொள்ளவு கொண்டவையும், அத்தகைய பகிரங்கப் பயணிகளின் போக்குவரத்துச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுபவையுமான அத்தகைய மோட்டார் கோச்சுகள் ;

(ii) *2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொடுப்பனவுகளுக்கு வருமதியாகும் ஏதேனும் வாடகைப் பணம் தொடர்பில், லொறிகள், ட்ராக்டர்கள் அல்லது இருபத்தெட்டு பயணிகள் ஆசனங்களுக்குக் குறையாத ஆசனக் கொள்ளளவு கொண்டவையும், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் அல்லது ஏதேனும் மாகாண வீதிப் பயணிகளின் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரினால் பகிரங்கப் பயணிகளின் போக்குவரத்துச் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுபவையுமான மோட்டார் கோச்சுகள் ;"*

*(3)* *விடயம் (XXX) என்பதை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-*

"(xxxi) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) தொலைத்தொடர்புச் சேவைகள் ;*

(xxxii) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) உயிரியல் தொகுதிக் கழிவுகளைப் பயன்படுத்தி உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பாளங்களும் ஓவியரின் வண்ணத் தட்டுகளும் ;*

(xxxiii) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் ;*

(xxxiv) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) காப்புறுதித் தொழிலொன்றில் தரகு அல்லது நட்டஈடு என்றவகையில் ஏதேனும் உள்நாட்டுக் காப்புறுதிக் கம்பெனியால் மீள்காப்புறுதியிலிருந்தான பெறுகைகளான சேவைகள் ;*

(xxxv) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புச் சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் உள்நாட்டுத் தொலைத்தொடர்புத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமங்கள் வழங்கும் சேவைகள் ;";*

*(4)* *அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில், அதன் விடயம்* (xxviii) *என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-*

"(xxix) *(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டுமுறைமை இலக்கங்களும் என்பதன் கீழ் குறித்துரைக்கப்பட்ட வானூர்தித் தூண்டுதற் கருவிகளும் பாகங்களும் ;*

(xxx) *சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியினதான ஒரு தொழில் தொடர்பான மாதிரிகள்.";*

(5) *அப்பாகத்தின் (ஊ) என்னும் பந்தியில்,* (ii) *ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-*

"(ii) (அ) அவற்றின் மீதான வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்ற தாய்நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்திற் கொண்டு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் இனங் காணப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள் (2008.1.1) ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; அல்லது

(ஆ) வெளிநாட்டுக் கடன்கள் அல்லது நன்கொடைகள் மூலம் அரசாங்க அமைச்சு களுக்கு நேரடியாக நிதியளிக்கப்பட்ட ஏதேனும் உள்ளகக்கட்டமைப்பு அபி விருத்திக் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள் (2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

அத்தகைய ஒவ்வொரு கருத்திட்டமும் நிதி யமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(iii) அத்தகைய பதிவுசெய்தலுக்காக ஏற்பாடுசெய்கின்ற 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் அல்லது மாகாண சபைகளினால் சட்டமாக்கப்பட்ட முறையான நியதிச்சட்டங்களின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கங்களினாலும் அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட லக் சதோசவினாலும் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள்.".

(6) அப்பாகத்தின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஏ) (2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக) ஊனமுற்ற படைவீரர்களின் பங்கேற்பினால் அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப்படும்வரை அத்தகைய படைவீரர்களின் புனர்வாழ்வுக்கெனப் பாதுகாப்பு அமைச்சினால் நிறுவப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பண்டங்கள் அல்லது சேவைகள்.".

குறித்தசில சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளால் செலுத்தப்படற்பாலதான வரிகளின் கொடுப்பனவிலிருந்து அவற்றிற்கு விலக்களித்தல்.

**21.** நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத் தொகையொன்றை ஆண்டு மொத்த விற்பனை வரவாகக் கொண்ட தொழில்முயற்சியொன்றைக் கொண்டுநடாத்துபவரும் அல்லது கொண்டுநடாத்துகின்றதும் இச்சட்டத்தின்கீழ் பொருளாதார சேவை விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளானவரும் அல்லது ஆளானதும் பொதுவில் போர்ச்சூழல் ஒன்று நிலவுவதன் காரணமாக அல்லது அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் ஏதேனும் நிதி நெருக்கடி காரணமாக 2010 திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய பொருளாதார சேவை விதிப்பனவின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளவருமான அல்லது தவணை தவறியுள்ளதுமான எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை இச்சட்டத்தின் கீழ் தவணைதவறுகையிலுள்ளவாறான அத்தகைய விதிப்பனவின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அதன்பொருட்டு செய்யப்படும் வேண்டுகோளொன்றின்மீது தவணைதவறுகையிலுள்ள பணத்தொகை தொடர்பில் அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

ஆயின், மேலும் எந்த ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது பங்குடைமை 2011 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வருங்கால மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதாகக்கூடிய எல்லாப் பணத்தொகைகளி னதும் கொடுப்பனவுக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை பொறுப்புடையதாகும் என்ற பயன்பாட்டிற்கு சமகாலத்தில் எழுத்திலான உறுதிப்பாடொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.".

நட்டோத்தரவாதம்.

**22**. இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கின்ற எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட் டுள்ளதாகவும், செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய எவையேனும் சேகரிப்பு கள் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்க வும் படுகின்றார்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**23**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்